# WORD OF CHRIST

# கிறிஸ்துவின் வசனம்





ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன் M.A., A.Be.,

# கிறிஸ்துவின் வசனம்

# WORD OF CHRIST

மரம் 3 செப்டம்பர் 1994 கனி 2

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகலஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; கொலோசெயர் 3:16**

## ஜெயம்
## VICTORY

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒரு ஜெயம்நிறைந்த வாழ்க்கை இவ்வுலகத்தில் கிறிஸ்தவரல்லாதவர்கள்வாழ்க்கையில் தோல்வியை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம்! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்களது வாழ்க்கையில் இல்லாததே. பரிசுத்த வேதாகமம் சொல்வதை கவனியுங்கள். தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் 1யோ 5:4 ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்றார். அந்தபடியாகஎவனொருவன் மறுபடியும்தேவனால் பிறக்கின்றானோ அவனே இந்த உலகத்தை ஜெயிக்க முடியும் என்று மேற்கண்ட வசனத்தின் படி பார்க்கின்றோம் பாவத்தில் உழன்று திரிகின்ற ஒருமனிதன் இந்த உலகத்தை ஜெயிக்க முடியாது, பெயர் கிறிஸ்தவர்களாக இருந்து கொண்டும் இந்த உலகத்தை ஜெயிக்க முடியாது. மாறாக அவரது வசனம் நமக்குள் இருக்கவேண்டும், அப்பொழுது இந்த உலகத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் ஜெயிக்க முடியும், ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவனாகவும் வாழமுடியும்

ஜெயம் என்பது நாம் பொறுமையோடு இருந்து பெற்றுக் கொள்ளும் ஒருவெற்றியாகும். அநேகருடைய வாழ்க்கையில் பொறுமையில்லாததால் ஒரு ஜெயக்கிறிஸ்தவனாக வாழ முடிவதில்லை. மத்தேயு 12:19—20 ஐ வாசிக்கும் போது, வாக்கு வாதம் செய்யவும் மாட்டார், கூக்குரலிடவும்மாட்டார்,அவருடையசத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை, அவர் நியாயத்திற்கு ஜெயம் கிடைக்கப் பண்ணுகிறவரைக்கும், நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கியெரிகிற திரியை அணைக்காமலுமிருப்பார். ஆம் பிரியமானவர்களே!

உங்களுடைய வாழ்க்கையிலும் வாக்குவாதம் செய்யாமல், கூக்குரலிடாமல், நியாயத்திற்கு ஜெயம் கிடைக்கிறவரைக்கும் பொறுமையாக இருங்கள். அப்பொழுது ஜெயம் கர்த்தரால் வரும்.

அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார் ஏசா 25:8 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூன்றாம நாளில்வெற்றிகரமாக உயிர்த்தெழுந்து 40 நாட்கள் சீஷர்களுக்கு தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். மரணத்தை ஜெயித்தார் என்று பார்க்கிறோம். மேலும் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும், பிழைப்பான் என்று சொல்லுகிறார். உங்களுடைய வாழ்க்கை இக்காரியத்தை நீங்கள் விசுவாசிப்பீர்களென்றால் ஒருக்காலத்திலும் மரணம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்ற வசனத்தின்படி மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாகிய நாம் ஒரு ஜெயக்கிறிஸ்தவனாகவே வாழவேண்டும் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். கர்த்தர் உங்களுக்கு ஜெயத்தைக் கட்டளையிடுவாராக!

**O சபைச்செய்திகள்:**

**!. ஆகஸ்டு 25 ம் தேதி சகோதர சகோதரிகளுக்கான வேத பாட வகுப்புகளும். மாலை நேர சுவிசேஷக் கூட்டமும் நடைபெற்றது. இக்கூட்டங்களில் சென்னை சகோ. பீட்டர் சாலமோன் அவர்கள் தேவ செய்தியைக் கொடுத்தார்கள். அநேகர் கலந்து கொண்டு பலன் பெற்றனர்.**

**2, சகோ. கனகராஜ் அவர்களின் குழந்தைக்கு ஜெனிட்டா தேவகிருபை என்ற பெயர் சூட்டப்பட்டது.**

**3. ஆகஸ்டு 21 ம் தேதி சகோதரி சுப்புலெட்சுமி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்.**

**4. ஆகஸ்டு 24 ம் தேதி சகோ. சடையாண்டிக்கும் சகோதரி சுப்புலெட்சுமிக்கும் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் முன்னிலையில் விராலிபட்டியில் நிச்சயம் செய்யப்பட்டது.**

**O ஆகஸ்டு மாத வேத அறிவு போட்டியில் வெற்றி பெற்றவர்கள்:**

| | |
|---|---|
| **1. சகோ. பொன்னர்** | **கணவாய்பட்டி** |
| **2. சகோதரி, ரூத்** | **G, கல்லுப்பட்டி** |
| **3. சிறுவன். உத்தமன்** | **கணவாய்பட்டி** |
| **4. ,, செல்லமணி** | **....** |
| **5. ,, மகாராஜன்** | **....** |

6. ,, ஜெயாபிரவிந்த் வத்தலக்குண்டு
7. ,, கோபி
8. சிறுமி ராஜலட்சுமி ,,
9. ,, அனிதா சொக்கலிங்கபுரம்
10. ,, ஜாஸ்மின் அம்மாபட்டி

**O ஆகஸ்டு மாத இதழின் விடைகள்**

1. தூஷிக்கப்படுகிறதே — ரோம 2: 24
2. மனுஷகொலைபாதகனாயிக்கிறான் — 1யோ 3:15
3. விக்கிரகாராதனைக்கு — 1 கொரி 10:14
4. யாக்கோபு, யூதாவை — ஆதி 49: 10
5. சேனைகளின் கர்த்தர் — மல்கி 3: 11
6. யோசேப்பு
7. ஆம்
8. கூடாது
9. ஞாயிற்றுகிழமை
10. வெள்ளிகிழமை

**O சிறுவர் வேத அறிவு போட்டி விடைகள்**

1. சரீரத்துக்குத் கொலோசெயர் 1:18
2. கிறிஸ்துவின்வசனம் ,, 3:16
3. ஜெபம்பண்ணுங்கள் ,, 4:2
4. எல்லாக்காரியத்திலேயும் ,, 3:20
5. ஞானம், அறிவு ,, 2:3

**O இம்மாத வேத அறிவுப் போட்டி**

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடைசி ஐந்திற்கு விடை மட்டும் வேதத்திலிருந்து இம்மாதம் 25 ம் தேதிக்குள் ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புக.

1. ஒரு வழியாய் உனக்கு எதிராக புறப்பட்டு வருவார்கள் எத்தனை வழியாய் உனக்கு முன்பாக ஓடிப் போவார்கள்?
2. என்ன செய்கிற ஆத்துமாவே சாகும்?
3. என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் எப்படிப்பட்டவன் என்றார்?
4. உம்முடைய இரட்சண்யத்தைஎன்கண்கள்கண்டதுஎன்றதுயார்?
5. ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான், நான் அவனுக்கு என்னவாய் இருப்பேன் என்றார்?
6. முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும், பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது என்பது உண்மையா?

7. ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாக பிரிந்திருந்தால் அந்த வீடு நிலை நிற்குமா?

8. உங்களை கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் எப்படிப்பட்ட ஆக்கினையை அடைவான்?

9. சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள் என்று யார் யாருக்கு சொல்வது?

10 வெளிப்படுத்தின விசேஷம் 5:5 யாரைப் பற்றி சொல்கிறது?

O இம்மாத சிறுவர் வேத அறிவுப் போட்டி

I தெசலோனிக்கேயர் புத்தகத்திலிருந்து நிரப்புக.

1. பொல்லாங்காய் தோன்றுகிற ........ விலகுங்கள்.

2. இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து ... ........ உங்களிடத்தில் பிரசங்கித்தோம்.

3. தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல .... .........அழைத்திருக்கிறார்.

4. ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு நீங்கள் ... ... .. ... விட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும்.

5. உபத்திரவங்களைச் சகிக்க ............ நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே.


## Challenge Examination
## To Earn Degree leading to the
# Bachelor of Biblical Studies

Any long time preacher, preaching for morethan 7 years without any age or educational bar can take the Examination in one sitting.

**Eligibility**

1. A proof ot more than 7 years of preaching in the field.
2. Must submit a thesis on a assigned subject.
3. Must take Examination in a designated place,

Writefor further detaisWith the enclosedSelfaddressed 9"x4" envelope along With 2 passport sized photos and a money order of Rs.20 for the prospectus

To
Registrar,
**The National Bible College,**
13, Sainagar, Madras - 600082. India.
Telephone: [044] 537 - 0882.

MONTHLY MAGAZINE
WORD OF CHRIST Regd No. 84661-92.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன்
அழைக்கின்றோம்.

ஞாயிறு காலை 8.30
புதன் மாலை 7.00

கிறிஸ்துவின் சபை
கணவாய்ப்பட்டி ரோடு,
வத்தலக்குண்டு-624202

இவ்விதழ் இலவசமாக
அனுப்பப்படுகிறது

PRINTED MATTER

To.

If undelivered please return to;

THE EDITOR
WORD OF CHRIST
P. Box No. 5
**Batlagundu-624202**
S. India

Edited and published by B. Arjunan M.A., A.Bs., on behalf of church of christ. near water tank, Batlagundu
Printed by C. Pandiyarajan B.Sc. SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624202. S. India